திருவொற்றியூரான்

இராமலிங்க சுவாமிகளின்

திருவுள்ளம்.

சென்னை

வே. மொ. பெ. கா. வெளியீடு நெ. 6.

உ

இராமலிங்க சுவாமிகளின்
திருவுள்ளக்கிடை.

சென்னை
திருவொற்றியூரான்
வேத மொழிபெயர்ப்புக் காரியாலய
வெளியீடு நெம்பர் 6.

எவரெடி பிரஸ்,
சூளை, மதராஸ்.

4-4

உ

சுப்பிரமண்யோம்

முன்னுரை.

ஈண்டு, எல்லா வுலகங்களும் உண்மையறிவா னந்த சின்மயமே யென்று, நூலனைத்தும் முழங்கவும், பெரியார் வழங்கவும், அறிஞர் அவ்வாறே ஒழுகிவந்திருக்கவும், ஆறறிவுடைய மக்களைச் சின்மயமென்று கூறவும் வேண்டுங் கொல்லோ!

மக்களனைவரும் சித்துவடிவினரே யாதலின், இவர் சிறியர், இவர் பெரியர், இவர் நல்லவர், இவர் தீயர் என்பன முதலிய வழக்குகள் மெய் யறிவிலாத பொய்யறிவுடையார்களின் கொள் கையா மென்க.

அற்றாகலினன்றே,

"ஆர்பெரியர் ஆர்சிறியர் ஆருறவர் ஆர்பகை வர், சீர் பெரியர் ஆனந்த சிற்சொருபர்—பேர் பெரியர், எங்கெங்குந்தாமா யிருந்து சட சித்

தனைத்தும், அங்கங் கியற்றுவதானால்" என்று கூறுகின்றது உண்மைத் திருவாக்கும்.

அங்ஙனமாயினும், மக்கள் தத்தமது செயல்களைப்பற்றியே, உயர்வு, தாழ்வு, பெரிது, சிறிது என்பன முதலிய நிலைமைகளை யடைகின்றனர் என்க.

இதுபற்றியே,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யால்" என்று கூறுகின்றது தமிழ் வேமுதம்.

மற்றும், சிலர் அரிய பெரிய செயல்களைச் செய்தும், மிகச் சிறிய செயல்களைச் செய்தும், பெரியர் சிறியர் என்றும் வழங்கவும் படுவர்.

இதனாலன்றோ,

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்" என்று அறிவுறுத்தினர் தெய்வப் புலமைத் திருவள்ளுவரும்,

இவ்வண்ணமிருக்க, நமது நாட்டிலும் பல பெரியோர்கள் தோன்றிப் பலவகைத் தெய்வத்

தோற்றங்களையும், தெய்வக் குடும்பங்களையும், தெய்வச் செய்கைகளையும், தெய்வப் போர்களை யும், எண்ணிறந்த சரிதங்களையும், மற்றும் பல தெய்வக் கட்டுப்பாட்டுகளையும், மிக உறுதிப்படுமாறு நிறுவி, சமயத்தை வளர்க்கின்றவர்கள் போன்றும், உலகத்தை யீடேற்றுகின்றவர் போன்றும், முத்தி வீட்டுக்கு அனைவரையும் அனுப்புகின்றவர்கள் போன்றும், ஞானத்தை நிறுத்திக் கொடுக்கின்றவர்கள் போன்றும், மக்கட்கு, மாடு, மனை, வீடு, பொருள், நிலம், தனம், புலன், பொறி, உடல், பிறப்பு முதலிய வைகளைக் கற்பிப்பது போன்று தெய்வங்கட்கும் கற்பித்துச் சாத்திரக் குப்பைகளைக் குவியச் செய்தார்கள். அந்தோ! நமது பந்தம் ஒருவகையாக நீங்கினும் நீங்கும். தெய்வங்கட்குள்ள கட்டுப்பாடும் பந்தமும் நீங்குவது மிகவும் அரிதேயன்றோ! இவைகளை விரிக்கில் தம் பல்லைக் குத்தி முகர்ந்து பார்ப்பதொக்குமென விடுத்தாம்.

நித்திய முத்தராகிய பெருங்கடவுள் ஒருவர் இருப்பரெனினும், அவருண்மையானது, சமய சன்மார்க்கர்கட்கும் அறிதற்கரிதா யிருக்க

சமயப் படுகுழியில் வீழ்ந்து கிடப்பார்க்கு அறிதல் எங்ஙன் கூடும்?

அற்றேல், இராமலிங்கப் பெருமானாரும் சமய சன்மார்க்கமாகிய பொன் விலங்கால் தளைக்கப்பட்டவரே யாதலின் அவர் மாத்திரம் கட்டுப்படாதவர் என்றல் என்னை யெனின்? உண்மை. சமய சன்மார்க்க விலங்கைப் பூட்டிக் கொண்டவர் எனினும், அவர் அதைப் பொன் விலங்கு போன்றே யுணர்ந்து நீங்கினார். ஏனைய பெரியோர், சமய விலங்கையும் பூடணமென்றே அணிந்து கொண்டனர் என்பது ஈண்டு உற்று நோக்கி உணரற்பாலதாம்.

இதை, திருவுள்ளக்கிடை என்னும் இச் சிறிய பளிங்கில் பரக்கப் பார்த்துக் கொள்ள லாம். இஃதன்றி, தத்தமது வல்லமையால் தத் தமக் கியைந்தவாறு அவர் கருத்து இதுதா னென்று, அநுமானத்தானும் ஐதிகத்தானும் அறிந்து வெளியிடல் உலகமயக்கிற்குக் காரண மாமென்றொழிக.

மற்றும், வடலூரில், அவர் நிறுவிய தத்து வக் குறிப்பென்னும் ஆலயத்தில், தெய்வத்

திற்குக் குடும்பங் கற்பியாது அருட்பெருஞ் சோதியின் குறியாக ஒளியை மாத்திரந் தாபித் ததும் இதையே உணர்த்து மென்க.

திருவருட் பிரகாச வள்ளலாரின் திருவுள் ளத்திற்கு மாறாக, சமபத்தைப் புகுத்தல், சாதியை வகுக்தல், உருவத்தை வைத்துப் போற்றல் முதலியவைகள் வெறியாட்டாய் முடியு மென்றுணர்க.

இராமலிங்க சுவாமிகளும் தெய்வ மயக்கம் பற்றி யுழன்றவரல்லரோ வெனின் ? ஆம் மயங்கினர் ; ஆனால் உருவங்களில், பண்டை யோர்களது தொடர்புபற்றி வந்த மயக்கம் ஒழி யாததற்கு முன்னர் மயங்கித் தேடினர். இதை அவரும் தாமே உடன்படுகின்றனர். ஆயினும், தேடி மயக்கந் தீர்ந்த போது தன்பாலிருந்த தோர் அருவப் பொருளாய் நிலைத்து நின்றனர் என்பதே அவர் திருவுளக்கருத்தாம்.

இதையே,

" தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான் முகனும், தேடித் தேடொண்ணாத் தேவனை யென்னுள்ளே " என்று திருமறை

யும் முறையிடுகின்றது. ஈண்டு, இத் திருவுள்ளக்கிடையில் அறிதற்பால தென்னேயோவெனின் ?

நாதமுடி மேலிருக்கும் வெண்ணிலாவே, என்ற இவரது திருவாக்கை, நாதர் முடிமேலிருக்கும் வெண்ணிலாவே என்று கொண்டு பெருமானுரைக் குற்றங் கூறிய மதவெறி பிடித்தவர்கள்போற் கொள்ளாது, தெய்வக் கற்பனே, சமய கற்பனே, சாதிக் கற்பனே, சாத்திரக் கற்பனே முதலியவைகளே ஆராய்ந்துணர்ந்து, சமய சன்மார்க்கத்தானும் அறிதற்கரிய சுத்த சன்மார்க்கப் பெரும் நிலேயை யடைதற்குரிய அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணேப் பெரு நோக்கத்தை யடைவித்தற்குரிய தயை, அன்பு, பொதுநோக்கம், சீவகாருண்யம், பரோபகாரம் முதலியவைகளேப்பெற்று வாழ் நாளேக்கழித்து மக்கள் உய்யவேண்டும் என்பதேயாம்.

இங்ஙனம்,

வேத மொழிபெயர்ப்பாசிரியர்,

காசிவாசி-சிவானந்த யதீந்திர சுவாமிகள்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

அருட் பிரகாசவள்ளலார் என்னும்

இராமலிங்க சுவாமிகளின்

பதின்மூன்றும் உபதேசத்திலுள்ள,

திருவுள்ளக்கிடை.

வருமுயிரிரக்கம்பற்றியே யுலக
    வழக்கிலென் மனஞ் சென்றதோறும்,
வெருவிநின்னடிக்கே விண்ணப்பித்திருந்தேன்
    விண்ணப்பஞ் செய்கின்றேனின்றும்,
உருவவென் உயிர்தான் உயிரிரக்கந்தான்
    ஒன்றதே யிரண்டிலையிரக்கம்,
ஒருவிலென்னுயிருமொருவு மென்னுள்ளத்
    தொருவனே நின்பதத்தாணை.

அருட்பிரகாச வள்ளலார்

வாக்கு.

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரை யில் இருந்ததுபோல் இனியும் வீண்காலம்

கழித்துக்கொண்டிராதீர்கள்; நல்ல விசாரணை யிலிருங்கள். முயற்சியுடன் இருந்தால் அதற்குத் தக்க லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம். என்னும் இது மேற்றொடர்பின் சாரமாம்.

இதற்கு மேற்பட, நாம் நாமும், பார்த்தும், கேட்டும், லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனென்றால் அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறியன்னியில் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப்போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனுந் தெரிவிக்காமல் பிண்ட லக்ஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில்? கைலாசபதி என்றும், வைகுண்டபதி என்றும், சத்தியலோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம், முதலியவையும் ஒரு மநுஷ்யனுக்கு அமைப்பதுபோல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச் சொல்லி யிருக்கின்

றூர்கள். "தெய்வத்துக்குக் கை, கால்களிருக்குமா?" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கின்றூர்கள். இது உண்மையாக இருப்பதாகவே—முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக்கொண்டிருந்தவர்களும் உண்மையறியாது அப்படியே கண்ணை மூடிக்கொண்டு உளறி யிருக்கின்றூர்கள். ஆனல், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லியிருக்கின்றூர்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்குப் பத்து வருஷம் எட்டு வருஷம் பிரயாசை எடுத்துக்கொண்டால் அற்ப சித்திகளையடையலாம். அதற்காக அவற்றில் லக்ஷியம் வைத்தால், ஆண்டவரிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிற லக்ஷியம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லக்ஷியம் போய்விட்டால் நீங்கள் அடையப்போகிற

பெரிய பிரயோஜனம் போய்விடும். அல்லது, அதில் முயற்சி செய்து அவ்வளவு காலம் உழைத்து அந்த அற்பப் பிரயோஜனத்தைத் தெரிந்துகொண்டு, அதனுல் ஒரு லாபத்தை ஏக தேசம் அடைந்தால் முக்கிய லாபம் போய் விடும். ஆதலால் அவைகளில் லக்ஷியம் வைக் காமல் ஆண்டவரிடத்திலேயே வைக்கவேண்டி யது.

முன் சொன்ன சித்தி, கற்பனை யென்கின் றது நான் செய்த

"இயல் வேதாகமங்கள் புராணங்க ளிதி காசம் இவை முதலா விந்திரசா லங்கடையா வுரைப்பர், மயலொருநூல் மாத்திரந்தான் சால மென அறிந்தார், மகனே நீ நூலனைத்தும் சாலமென வறிக."

என்னும் வாசகப் பெரு விண்ணப்பத்தாலும், அருள் விளக்கப் பாசுரத்தாலு முணர்க. மே லும் அதிற்கண்ட குறிப்பையுந் தெரிந்துகொள் ளுங்கள்.

இதுபோல், வியாகரணம் - தொல்காப்பியம்- பாணினீயம் - முதலியவைகளில் சொல்லியிக்கு

கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே, அவைகளில் குற்றமே சொல்லியிருக்கின்றார்கள். எவ்வாறெனின்? தொண்ணூறு, தொள்ளாயிரம் என்கிற கணிதத்தின் உண்மை நான் சொன்ன பிறகு தெரிந்துகொண்டீர்களல்லவா? இப்படியே, ஒன்று, இரண்டு முதல் நூறு முதலான இலக்கங்களுக்கும் உகர இறுதிவருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப்பெயராக இட்டிருக்கிறார்கள். தொல் நூறு தொண்ணூறென்றும், தொல் ஆயிரம் தொள்ளாயிரமென்றும் வழங்குகின்றன. தொல் என்பது ஒன்று குறையத் தொக்கியது. தொன்மை தொல்லெனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறென மருவியது இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன் ஆயிரமென்றும், ஒன்று குறைந்த பத்தென்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால் சிறு குழந்தைகள் கூட அறிந்து கொள்ளும்.

இதுபோல், சைவம், வைணவம், முதலிய சமயங்களிலும், வேதாந்தம் முதலிய மதங்களி

னும், லஷியம் வைக்கவேண்டாம். அவற்றில் தெய்வத்தைப்பற்றி குழூஉக்குறியாகக் குறித்திருக்கிற தேயன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனெனில் அவைகளில் அவ்வச்சமயமதங்களுளிம்—அற்பப் பிரயோஜனம் பெறக் கூடுமே யல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை யென்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது. இவைகளுக்கெல்லாம் சாக்ஷி நானுகவேயிருக்கின்றேன்.

நான் முதலில் சைவசமயத்தில் லக்ஷியம் வைத்துக்கொண் டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்லமுடியாது. அது, பட்டணத்துச் சுவாமிகளுக்கும், வேலாயுத முதலியாருக்கும், இன்னும் சிலர்க்கும் தெரியும். அந்த லக்ஷியம் இப்போது எப்படிப் போய்விட்டது? பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டியதில்லை. நான் பாடியிருக்கிற திருவருட்பாவில் அடங்கி யிருக்கின்ற பாட

லேயும், மற்றவர்கள் பாடலேயும், சபைக்குக் கொண்டுவந்தால் அவைகளே சாக்ஷி சொல்லி விடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப் போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

இப்போது ஆண்டவர் என்னை ஏறுதநிலே மேல் ஏற்றியிருக்கின்றார். இப்போது எல் லாவற்றையும் விட்டுவிட்டதனால் வந்தலாபம் இது ஆதலால் நீங்களும்விட்டு விட்டீர்களானால் என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறு வீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள். ஏதாவது லாபத்தைப் பெற்றுக்கொண்டார்களா? பெற்றுக் கொள்ள வில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலேயில் தூக்கிவிட்டதென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கிவிடவில்லே.

என்னை இந்த விடத்திற்குத் தூக்கிவிட்டது யாதெனில்? அக்காலத்திலேயே எனக்குத்

தெரிவிக்கவேண்டியதைத் தெரிவித்தாரென்று வாசகப்பெரு விண்ணப்பத்திலும்,

"எத் தேவரையும் நினது சாயையாப் பார்த்ததே யன்றித் தலைவவே றெண்ணிய துண்டோ" எனவும்

"தேடியதுண்டு நினதுருவுண்மை" என்னுந் தொடக்கமுடைய பதிகத்திலும், விண்ணப்பித் திருக்கின்றேன்.

மேலும் அவர் உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில்?

"கருணையும் சிவமே பொருளெனக் காணுங் காட்சியும் பெறுக" என்றதுதான்.

என்னை ஏறுநிலைமிசை யேற்றிவிட்டது யாதெனில்? தயவு. தயவு என்னுங் கருணை தான் தூக்கிவிட்டது.

அந்தத்தயவுக்கு ஒருமைவர வேண்டும் அந்த ஒருமை இருந்தால்தான் தயவுவரும். தயவுவந்தால் தான் பெரியநிலைமேல் ஏறலாம்.

அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை.